கடமான் முட்டி வன ஊழியர் உயிரிழப்பு: ஒருவர் காயம்

சேலம், மே 30: சேலம், குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவில் வியாழக்கிழமை கடமான் முட்டியதில் வன ஊழியர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் பலத்த காயங்களுடன் சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சேலம் ஏற்காடு மலை அடிவாரத்தில் குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்கா செயல்பட்டு வருகிறது.

இந்தப் பூங்காவில் புள்ளி மான், கடமான், முதலை, குரங்கு, வண்ணப் பறவைகள், வெள்ளை மயில் என 200-க்கும் மேற்பட்ட வன உயிரினங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த விலங்குகளை பராமரிக்க வன ஊழியர்கள், தற்காலிக வன ஊழியர்கள் என 5-க்கும் மேற்பட்டோர் உள்ளனர்.

இதில் நாமக்கல்லைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் (25), குரும்பப்பட்டியைச் சேர்ந்த முருகேசன் (45) ஆகியோர் தற்காலிக விலங்கு பாதுகாவலர்களாகப் பணியாற்றுகின்றனர்.

இவர்கள் இருவரும் கடமான்கள் உள்ள பகுதிக்கு வியாழக்கிழமை நண்பகல் கோதுமை தவிடு உள்ளிட்ட உணவுப் பொருள்களை வழங்க வாகனத்தில் சென்றனர். அங்குள்ள உணவுத் தொட்டியில் கோதுமை தவிட்டை தமிழ்ச்செல்வன் கொட்டிக் கொண்டிருந்தபோது, திடீரென ஒரு கடமான் ஆக்ரோஷமாக வந்து, தமிழ்ச்செல்வனை முட்டித் தள்ளியது. இதில் அவர் கீழே விழுந்த நிலையில், மீண்டும் மீண்டும் அவரை முட்டியது. அவரைக் காப்பாற்றுவதற்காக உடன் சென்றிருந்த முருகேசன் வெளியே இழுத்துள்ளார். அப்போது, அவரையும் அந்தக் கடமான் கடுமையாக முட்டித் தள்ளியது.

இதைப் பார்த்த சுற்றுலாப் பயணிகள் கூச்சலிட்டனர். சப்தம் கேட்டு சக ஊழியர்கள் அங்கு விரைந்து சென்று 2 பேரையும் மீட்டு, சேலம், அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

இதில், தமிழ்ச்செல்வன் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். பலத்த காயமடைந்த முருகேசனுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தகவலறிந்ததும் மாவட்ட வன அலுவலர் காஷியப் ஷஷாங்க் ரவி, உதவி வன பாதுகாவலர் செல்வகுமார், வனச்சரகர் கமலநாதன் ஆகியோர் நேரில் விசாரணை நடத்தினர். இதுகுறித்து கன்னங்குறிச்சி போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர்.

கைப்பேசியில் பேசியபடி காரை இயக்கிய வழக்கில் யூடியூபர் வாசனுக்கு ஜாமீன்

மதுரை, மே 30: கைப்பேசியில் பேசியபடி காரை இயக்கிய வழக்கில் கைது செய்யப்பட்ட யூடியூபர் டி.டி.எப். வாசனுக்கு மதுரை குற்றவியல் நீதிமன்றம் வியாழக்கிழமை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது.

கோவை பகுதியைச் சேர்ந்தவர் யூடியூபர் டி.டி.எப். வாசன். இவர் இரு சக்கர வாகனத்தில் சாகசம் செய்த வழக்கில் கைது செய்யப்பட்டு, அவருடைய ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில், கடந்த 15-ஆம் தேதி மதுரை வண்டியூர் சுங்கச்சாவடி பகுதி வழியாக காரில் சென்ற அவர், கைப்பேசியில் பேசியபடி சென்றார். மேலும், அதை விடியோ எடுத்து தனது யூடியூப் பக்கத்திலும் பதிவிட்டார். இதுகுறித்து மதுரை அண்ணாநகர் போலீஸார் வழக்குப் பதிந்து, அவரை புதன்கிழமை சென்னையில் கைது செய்து, மதுரைக்கு அழைத்து வந்தனர்.

இந்த வழக்கில் பிணை கோரி, மதுரை மாவட்ட 6-ஆவது குற்றவியல் நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி சுப்புலட்சுமி முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர் தரப்பில், யூடியூபர் வாசனால் எந்த ஒரு தனி மனிதருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. அவர் முதுகு வலியால் அவதிப்பட்டு வருகிறார். கண்ணாடி அணியாமல் அவரால் வெளியில் செல்ல முடியாது. வருகிற 4-ஆம் தேதி திரைப்படத்தில் நடிக்க உள்ளார். இதற்காக ரூ.25 லட்சம் முன்பணம் பெற்றுள்ளார்.

கைப்பேசியில் பேசியபடி காரை இயக்கியதற்காக மன்னிப்பு கோருகிறோம். திருந்தி வாழ்ந்து வரும் அவருக்கு பிணை வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

இதையடுத்து, அரசுத் தரப்பில், மனுதாரர் ஏற்கெனவே இரு சக்கர வாகனத்தை வேகமாக இயக்கி சாகசம் செய்ததால், அவருடை ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட்டது. இனிவரும் காலங்களில் எந்த வாகனத்திலும் சாகசம் செய்ய மாட்டேன் எனக் கூறி, அவர் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளார். தற்போது, இதையும் மீறி கைப்பேசியில் பேசியபடி காரை இயக்கியுள்ளார். எனவே, அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவரது செயல்பாடுகளை ஏராளமானோர் பின்பற்றுவதால், தவறான வழிக்கு செல்ல வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, மனுதாரரிடம் ஏன் வாகனத்தை வேகமாக இயக்குகிறீர்கள் எனக் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த வாசன், நான் வாகனத்தை வேகமாக இயக்கவில்லை. என் மீது போலீஸார் பொய் வழக்குப் பதிந்துள்ளனர். தந்தை இல்லாத நிலையிலும் கடும் சிரமத்துக்கு மத்தியில் படித்தேன் என்றார்.

இதையடுத்து, நீதிபதி பிறப்பித்த உத்தரவு:

வாசன் மீதான வழக்கில் 308-ஆவது பிரிவை ரத்து செய்து, அவருக்கு பிணை வழங்கப்படுகிறது. இனிவரும் காலங்களில் இது போன்ற செயல்களில் ஈடுபடமாட்டேன் என உறுதிமொழிக் கடிதம் அளிக்க வேண்டும் என்றார் நீதிபதி.

மின்சாரம் பாய்ந்து ஆண் யானை உயிரிழப்பு

ஒசூர், மே 30: நொகனூர் கிராமத்தில் மின்சாரம் பாய்ந்ததில் ஆண் யானை உயிரிழந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரை அடுத்த தேன்கனிக்கோட்டை வனச்சரகம், நொகனூர் வனப்பகுதியில் 3 யானைகள் முகாமிட்டிருந்தன. ஜார்கலட்டி வனப்பகுதியில் ஒற்றை யானை உணவு, தண்ணீர் தேடி கிராமப் பகுதியில் சுற்றி வந்ததால் மக்கள் அச்சமடைந்தனர். இந்த யானைகளை அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில், ஒசூர் வனக் கோட்ட உயிரினக் காப்பாளர் கார்த்திகேயனி மேற்பார்வையில் தேன்கனிக்கோட்டை பகுதியில் 10 பேர், ஜவளகிரி பகுதியில் 10 பேர் கொண்ட யானை விரட்டும் குழுவினர் விவசாயிகளுடன் இணைந்து யானைகள் நடமாட்டத்தை இரவு, பகல் கண்காணித்து அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்டும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், புதன்கிழமை தேன்கனிக்கோட்டை வனச்சரக அலுவலர் விஜயன், ஜவளகிரி வனச்சரக அலுவலர் அறிவழகன் தலைமையில் 20 பேர் கொண்ட குழு மூன்று யானைகளை தாவரகரை வனப்பகுதியிலிருந்து ஜவளகிரி வனப்பகுதிக்கு விரட்டினர். அப்போது, பாலதொட்டனப்பள்ளி அருகே உள்ள தனியார் பட்டா நிலத்தில் உள்ள கிரீன்ஹவுஸ் அருகே யானைகள் சென்றபோது, தாழ்வாகச் சென்ற மின்கம்பியில் ஓர் ஆண் யானை சிக்கி மின்சாரம் பாய்ந்ததில் இறந்தது.

மின்சாரம் பாய்ந்ததில் உயிரிழந்த ஆண் யானை.

தகவல் அறிந்த ஒசூர் வனக் கோட்டை உயிரினக் காப்பாளர் கார்த்திகேயனி சம்பவ இடத்துக்குச் சென்று இறந்த யானையைப் பார்வையிட்டார்.

பின்னர் கால்நடை மருத்துவர்கள் மூலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

இதேபோல கடந்த 20 நாள்களுக்கு முன் சந்தனப்பள்ளி கிராமத்தில் தாழ்வாகச் சென்ற மின்கம்பியிலிருந்து மின்சாரம் பாய்ந்து யானை இறந்தது குறிப்பிடத்தக்கது.

கோவை அருகே சிறுத்தை நடமாட்டம்: பொதுமக்கள் அச்சம்

கோவை, மே 30: கோவை அருகே குடியிருப்புப் பகுதியில் காணப்படும் சிறுத்தை நடமாட்டத்தால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம், சோமையனூர் ஊராட்சி பழனியப்பா லே-அவுட்டைச் சேர்ந்தவர் சக்தி. இவர், வீட்டில் கோழி வளர்த்து வருகிறார்.

இந்நிலையில், கோழி ஒன்று காணாமல் போனதையடுத்து வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கேமரா பதிவுகளைப் பார்த்துள்ளனர்.

அதில், வீட்டின் சுவரில் ஏறி நின்ற கோழியை சிறுத்தை ஒன்று பிடித்துச் சென்றது தெரியவந்தது.

இது குறித்து அவர்கள் வனத் துறையினருக்கு தகவல் அளித்தனர். மேலும், இத்தகவல் அப்பகுதி முழுவதும் பரவியதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறுவதற்கு முன்பு சிறுத்தையைப் பிடித்து வனப் பகுதியில் விட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பங்குச்சந்தையில் ரூ.20 கோடி மோசடி: இளைஞர் கைது

ஆவடி, மே 30: இணையதள டிரேடிங்கில் பல மடங்கு லாபம் கிடைக்கும் எனக் கூறி பலரிடம் ரூ.20 கோடி வரை மோசடி செய்த வழக்கில் ஆவடி மத்திய குற்றப் பிரிவு போலீஸார் இளைஞரை கைது செய்தனர்.

பூந்தமல்லி அருகே காட்டுப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திக் (41). இவர் தகவல் தொழில்நுட்ப ஊழியர். இவரது, முகநூலில் டிரேடிங் எப்படி செய்வது என்பது தொடர்பாக வந்த விளம்பரத்தைப் பார்த்து லைக் கொடுத்துள்ளார்.

தொடர்ந்து, கடந்த மாதம் 11-ஆம் தேதி, இரு கைப்பேசி எண்களில் இருந்து 2 பேர் அவரது வாட்ஸ் சாப் எண்ணிற்கு இணையதளம் டிரேடிங் குறித்து லிங்க் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இதை கார்த்திக் திறந்து, டிரேடிங் தொடர்பான விவரங்களைப் பார்த்த போது, தனது நிறுவன வங்கிக் கணக்கு வாயிலாக லாகின் செய்ய அனுமதி பெற்றுள்ளார். தொடர்ந்து, ரூ.4 லட்சம் முதலீடு செய்து, அதிலிருந்து ரூ.36,000 திரும்ப எடுத்துள்ளார்.

இதையடுத்து 10 விழுக்காடு தரகு போக, 300 விழுக்காடு லாபம் கிடைக்கும் 3 நிறுவனங்கள் டிரேடிங்கில் இணைய விரும்புவதாக வாட்ஸ் ஆப் குழுவில் தெரிவித்துள்ளார். இந்நிலையில், தரகு தொகையான ரூ.28 லட்சம் செலுத்தாவிட்டால், வங்கிக் கணக்கு முடங்கிவிடும் என மர்ம நபர்கள் கூறியுள்ளனர்.

மோகன்ராஜ்

இதையடுத்து கார்த்திக் ரூ.28 லட்சத்தை வங்கி வாயிலாக செலுத்தியுள்ளார். மேலும், மர்ம நபர்கள் கொடுத்த பல்வேறு வங்கி கணக்கிற்கு பல தவணைகளில் ரூ.1.36 கோடி செலுத்தி பணத்தை இழந்துள்ளார்.

இது குறித்து கார்த்திக் ஆவடி காவல் ஆணையரகத்தில் புகார் அளித்தார். ஆணையர் கி.சங்கர் உத்தரவின் பேரில் இணைய வழி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மகாலெட்சுமி தலைமையில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதில் சென்னை பள்ளிக்கரணை, ராஜேஷ் நகரைச் சேர்ந்த ரமேஷ்குமார் (38), ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், நத்தம் கிராமத்தைச் சேர்ந்த அருண் (30) ஆகியோரை கடந்த வாரம் கைது செய்தனர்.

இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான மதுரை உசிலம்பட்டி, வண்ணாரப்பேட்டை தெருவைச் சேர்ந்த மோகன்ராஜ் (33) என்பவரை போலீஸார் புதன்கிழமை பிடித்து விசாரித்தனர். இதில் கார்த்திக் உள்ளிட்ட பலரிடம் ரூ.20 கோடி வரை பண மோசடியில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதன் பிறகு போலீஸார் அவரை கைது செய்து பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, புழல் சிறையில் அடைத்தனர்.

சீர்காழி அருகே முந்திரி காட்டில் தீ விபத்து

50 ஏக்கர் மரங்கள் கருகின

சீர்காழி, மே 30: மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே ஏற்பட்ட காட்டுத் தீயால் சுமார் 50 ஏக்கரில் முந்திரி, தைல மற்றும் பனை மரங்கள் வியாழக்கிழமை எரிந்து சேதமாகின.

சீர்காழி அருகேயுள்ள தொடுவாய் கிராமத்தில், திருமுல்லைவாசல் மீனவ கிராமத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் என்பவருக்குச் சொந்தமான முந்திரி காடு உள்ளது. இந்தக் காட்டில் வியாழக்கிழமை காலை தீப்பற்றியது.

இதைப் பார்த்த கிராம மக்கள், சீர்காழி தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் அளித்தனர். மேலும், 5 டிராக்டர்களில் தண்ணீர் கொண்டு வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

சீர்காழி தீயணைப்பு வீரர்களும் வாகனத்துடன் விரைந்து வந்து தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

எனினும் காடு முழுவதும் பரவிக்கிடந்த காய்ந்த சருகுகளால் தீ தொடர்ந்து பரவியது. இதைத்தொடர்ந்து, பூம்புகார், தரங்கம்பாடி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 3 தீயணைப்பு வாகனங்கள் வந்து, தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

அதற்குள் சுமார் 4 கி.மீ. சுற்றளவுக்கு தீ பரவியது. இதில் 50 ஏக்கர் பரப்பளவில் முந்திரி, தைல மரங்களும், 300-க்கும் மேற்பட்ட பனை மரங்களும் எரிந்து சேதமாகின.

மரங்களில் பற்றி எரியும் தீ.

தீ விபத்துக்கான காரணம் குறித்து சீர்காழி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

சவுக்கு சங்கர் ஜாமீன் மனு வாபஸ்

மதுரை, மே 30: யூடியூபர் சவுக்கு சங்கருக்கு பிணை வழங்கக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை அவரது வழக்குரைஞர் திரும்பப் பெறுவதாக வியாழக்கிழமை தெரிவித்தார். இதை விசாரணை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

தேனி அருகேயுள்ள பூதிப்புரம் பகுதி தனியார் விடுதியில் சவுக்கு சங்கர் தங்கியிருந்தார். கடந்த 4-ஆம் தேதி அந்த விடுதிக்குச் சென்ற கோவை இணையக் குற்றத் தடுப்புப் பிரிவு போலீஸார், பெண் காவலர்களை அவதூறாகப் பேசிய வழக்கில் அவரைக் கைது செய்தனர்.

அப்போது, தேனி பழனிசெட்டிபட்டி போலீஸார், அந்த விடுதியில் வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை பறிமுதல் செய்து, சவுக்கு சங்கர் மீது வழக்குப் பதிந்தனர். மேலும், அவருடன் தங்கியிருந்த பரமக்குடியைச் சேர்ந்த உதவியாளர் ராஜரத்தினம் (42), கார் ஓட்டுநர் ராம்பிரபு (22) ஆகியோரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

சவுக்கு சங்கருக்கு கஞ்சா விற்பனை செய்ததாக, கமுதி பகுதியைச் சேர்ந்த மகேந்திரனையும் போலீஸார் கைது செய்தனர்.

இந்த நிலையில், சவுக்கு சங்கர் பிணை வழங்கக் கோரி, மதுரை போதைப் பொருள் தடுப்பு முதன்மை நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்த மனு, நீதிபதி செங்கமல செல்வன் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, சவுக்கு சங்கர் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர், பிணை கோரி தாக்கல் செய்த மனுவைத் திரும்பப் பெறுவதாகத் தெரிவித்தார். இதை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

சவுக்கு சங்கர் கஞ்சா வைத்திருந்ததால் அவருக்கு பிணை வழங்கக்கூடாது என குறிஞ்சியர் பெண்கள் ஜனநாயகப் பேரவையைச் சேர்ந்த பவானி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் ஏற்ற நிலையில், சவுக்கு சங்கர் தனது பிணை மனுவைத் திரும்பப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

Bank of Baroda बैंक ऑफ़ बड़ौदा

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை, சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, இடை தளம், துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008. போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு
"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6 (2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும் இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண். 1 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி:

கடன்தாரரின் பெயர்: திரு.G.ராஜா திலீப், த/பெ. திரு.கணேசன் சிவகாமி நாடார், **2. திருமதி.R.தனலட்சுமி,** க/பெ திரு.G. ராஜா திலீப், **இருவரின் முகவரி:** பிளாட் எண். F1, பிளாக் A, ஜீனத் அப்பார்ட்மெண்ட்ஸ், 105/10, சோங்குவேல் தெரு, பெரியார் நகர், நாகல்கேணி, குரோம்பேட்டை, சென்னை - 600 044 **மேலும்:** எண். 6/547, 7C, வ.உ.சி. தெரு, பேட்டவாட்சி நகர், விருதுநகர் - 626 001. **மொத்த நிலுவை தொகை : 25.05.2024 அன்று வரை ரூ.49,61,510.72** கூடுதலாக பின்வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் : சுவாதீன நிலை : அசல் சுவாதீனம் தென் சென்னை பதிவு மாவட்டம், பம்மல் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் தாலுகா, வெங்கடேஷ்வரா நகர், அனகாபுத்தூர் கிராமம் என்ற முகவரியில் பழைய சர்வே எண்.125/2 மற்றும் பட்டா எண். 473-ன் படி புதிய சர்வே எண். 125/C-ன் படி மனை எண். 4-ல் உள்ள **3201 சதுர அடி** நிலத்தில் 583 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு உரிமை உள்ள நிலத்துடன் **"SVS கார்டன்"** என்ற பெயர் கொண்ட கட்டிடத்தில் 2வது தளத்தில் **1117 சதுர அடி** பில்ட் ஏரியா கொண்ட ப்ளாட் எண். C-4. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் அங்குள்ள கவர்டு கார்பார்க்கிங். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.5, தெற்கில் : மனை எண்.3, கிழக்கில் : சாலை, மேற்கில் : சர்வே எண். 125/1. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 97 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 97 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 33 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 33 அடி, **அட்சரேகை:12.59.202N (12.988945), தீர்க்கரேகை :80.07.494E (80.130.389)**

குறைந்த பட்ச விலை : ரூ. 32,50,000/- | முன் வைப்பு தொகை : ரூ. 3,25,000/- | ஏல உயர்வு தொகை : ரூ. 10,000/-

வ.எண். 2 : கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி: **கடன்தாரரின் பெயர்: M/s.இந்திரா எண்டர்பிரைசஸ் பிரதிநிதியாக உரிமையாளர் திருமதி.இந்திரா** க/பெ.தியாகராஜன், மனை எண்.5A, பாரதி நகர், 2வது பிரதான சாலை, பழைய பெருங்களத்தூர், சென்னை-600 063 **மேலும்:** (i) எண்.54, 1-வது தெரு, கௌரி அவென்யூ, அனகாபுத்தூர், காஞ்சிபுரம் - 600 070 (ii) மனை எண்.40, செகரட்டிரியேட் காலனி, அகத்தியர் தெரு, பதுவஞ்சேரி, மாடம்பாக்கம், சென்னை - 600 126 **ஜாமீன்தாரரின் பெயர்: திரு.தியாகராஜன்** த/பெ.முத்தையா, எண். 54, 1-வது தெரு, கௌரி அவென்யூ, அனகாபுத்தூர், காஞ்சிபுரம் - 600 070 **மேலும்:** மனை எண்.40, செகரட்டிரியேட் காலனி, அகத்தியர் தெரு, பதுவஞ்சேரி, மாடம்பாக்கம், சென்னை - 600 126 **திரு.துளசிமணி த/பெ.கோவிந்தசாமி,** எண்.1, கணபதி தெரு, பழவந்தாங்கல், சென்னை- 600 114. **மொத்த நிலுவை தொகை: 25.05.2024 அன்று வரை ரூ.5,41,34,351.09** கூடுதலாக பின்வட்டி, பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய அசையா சொத்துக்களின் விவரங்கள் : சுவாதீன நிலை - அசல் சுவாதீனம்: அட்டவணை-A: தென் சென்னை பதிவு மாவட்டம், பல்லாவரம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுகா, ஜமீன் பல்லாவரம் கிராமம், பழைய கதவு எண். 306B, புதிய எண்.154B, GST சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044 என்ற முகவரியில் பழைய சர்வே எண். 500/59L-ன் படி 0.05 ஏக்கர், 500/59K-ன் படி 0.12 ஏக்கர், 500/59J-ன் படி 0.01 ஏக்கர் மற்றும் 500/62-ன் படி 0.05 ஏக்கர் **மொத்தம் 0.23 ஏக்கர்.** R.P.T. எண்.1645/2016-ன்படி புதிய சர்வே எண். 9/3, டவுன் சர்வே எண். 9/3, வார்டு எண்.E, பிளாக் எண்.11, உட்புறம் மற்றும் வெளிபுற வழி உரிமையுடன் உள்ள 740 சதுர அடி மற்றும் 8 அடி பொது நடைபாதையுடன் 720 சதுர அடி (8 × 90) நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : 8 அடி பொது நடைபாதை, தெற்கில் : திருமதி. ராஜேஸ்வரி அவர்களுக்கு சொந்தமான நிலம், கிழக்கில்: திரு.சிவலிங்கம் அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில்: மருதிக்கு சொந்தமான நிலம். அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் : 37 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் : 37 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் : 20 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் : 20 அடி. **அட்டவணை-B:** 246 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு உரிமை உள்ள நிலத்துடன் CC குரோம் அப்பார்ட்மெண்ட்ஸ் என்ற பெயர் கொண்ட குடியிருப்பில் இரண்டாவது தளத்தில் பொது பகுதிகள் உட்பட **794 சதுர அடி** கொண்ட ப்ளாட் எண். S1.
அட்சரேகை : N **12.95416 தீர்க்கரேகை:** E **80.14183**

குறைந்த பட்ச விலை : ரூ. 31,41,000/- | முன் வைப்பு தொகை : ரூ 3,15,000/- | ஏல உயர்வு தொகை : ரூ. 10,000/-

மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம்	19.06.2024 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	12.06.2024 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
EMD	18.06.2024 அன்று மாலை 4.00 மணிக்குள்

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை www.bankofbaroda.com மற்றும் மின் ஏல முகவரின் வலைதளம் அதாவது மின் ஏல முகவர் வலைதளம் https://ibapi.in. மேலும் விவரங்களுக்கு திரு.E.விஜய் அவர்களை-8940056367 மற்றும் 044-28885428-ல் தொடர்பு கொள்ளலாம்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 30.05.2024
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

ADITYA BIRLA CAPITAL — PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வெரவல், குஜராத் - 362266
கிளை அலுவலகம் : அலகு எண். 10 & 12, 6வது மற்றும் 4வது தளம், ஒவல் கட்டடம், வெங்கட் நாராயணா சாலை, தி நகர், சென்னை-600 017

"பிற்சேர்க்கை-IV-A"
[பார்க்க - விதி 8(6) க்கான விதி விலக்கு]
அசையா சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் '2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள்' 2002-ன் விதி 8 (6) க்கான விதி 9(1) - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. மாண்பமை உயர் நீதி மன்றம், பம்பாய் - ல் ஜாமீன் பெற்று கடனளித்த ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் - ஆல் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல் முறையீட்டு எண். 335/2022 ன் இடைநிலை விண்ணப்ப எண். 9864/2022 ல் பிறப்பிக்கப்பட்ட 2023 ஜனவரி 11 தேதிய ஆணையின் வாயிலாக இதன் கீழ்க்குறிப்பிட்ட பட்டியல் A ல் கண்ட அசையா சொத்துக்களை விற்பனை செய்ய ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அனுமதியளித்துள்ளது.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால், இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள், கடன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்களான (i). M/s. நாதெள்ள சம்பத்து செட்டி அண்டு கோ லிட்., M/s. நாதெள்ள சுலோச்சனாம்மா சாரிடபிள் ட்ரஸ்ட், M/s. நாதெள்ள சம்பத்து ஜுவெல்லரி பிரைவேட் லிட்., M/s. பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்து செட்டி சாரிட்டீஸ் (கடன்தாரர்கள்) (ii). திரு. நாதெள்ளா ரங்கநாத குப்தா, திரு. நாதெள்ளா ப்ரபண்ணா குமார், திரு. நாதெள்ளா ப்ரசண்ணா குமார், திருமதி. நாதெள்ளா ராதிகா மற்றும் திருமதி. நாதெள்ளா லட்சுமி ப்ரியா (ஜாமீன்தாரர்கள்) ஆகியோரிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு 21.06.2024 ம் தேதியின் படி களம் (E) ல் விவரிக்கப்பட்ட கடன் கணக்கு எண்களுக்கு களம் (B) ல் விவரிக்கப்பட்ட நிலுவைத்தொகை வர வேண்டிய நிலுவைத்தொகை ரூ. 88,66,14,721.74/- (ரூபாய். எண்பத்தெட்டு கோடியே அறுபத்தாறு இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்று இருபத்தோறு மற்றும் பைசா எழுபத்திநான்கு மட்டும்) மற்றும் பணமாக்கப்படும் வரை சேர்ந்து வரும் வட்டி மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 31.03.2024 அன்று விற்பனை செய்யப்படும்.

அடிப்படை விலை ரூ. 5,29,74,000/- (ரூபாய். ஐந்து கோடியே இருபத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரம் மட்டும்) மற்றும் டேவணித்தொகை ரூ. 52,97,400/- (ரூபாய். ஐம்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து நானூறு மட்டும்) ஆகும்.

பட்டியல் "A"
அசையா சொத்து விபரம்:

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, எண். 111, வரதராஜபுரம் கிராமம், சர்வே எண். 255/1, பட்டா எண். 1539 ன் படி, புதிய சர்வே எண். 255/37 ல் அமையப்பெற்ற LPDM/DTCP எண். 31/70, 3/71 மற்றும் 4/71 ன் படி அங்கீகரிக்கப்பட்ட லே அவுட்டில் உள்ள 1 ஏக்கர் 8 சென்ட் (43.5 ஏர்ஸ்) அல்லது 47088 சதுர அடி பரப்பளவு கொண்ட பள்ளிக்கான சைட் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன :
வடக்கு : 30 அடி சாலை (தாசில்தார் சுப்ரமணியம் சாலை)
தெற்கு : 30 அடி சாலை (துணை கலெக்டர் செல்லையா சாலை)
கிழக்கு : 30 அடி சாலை (ஸ்ரீனிவாசன் IAS சாலை)
மேற்கு : ப்ளாட் எண்கள். 1555, 1563, 23 அடி சாலை, ப்ளாட் எண்கள். 1454, 1570
இது படப்பை சார் பதிவு மாவட்டம், வரதராஜபுரம் பஞ்சாயத்து, குன்றத்தூர் படப்பை பஞ்சாயத்து ஒன்றிய எல்லைக்குள் அமைந்துள்ளது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx அல்லது https://sarfaesi.auctiontiger.net இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

தேதி : 31.05.2024
இடம் : சென்னை
ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் - க்காக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, (9710917596 / 9599108393)
Loan Account Numbers: :
1. 0000080000389
2. 0162101

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம் : ASV ஆதர்ஷ் டவர், 719, பதாரி சாலை, அண்ணாசாலை எதிரில், சென்னை, தமிழ்நாடு - 600 002.

சுவாதீன அறிவிப்பு (விதி 8 (1) -ன் கீழ்) (அசையா சொத்துக்காக)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-ன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-ன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினை பத்தி (B)-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பி பத்தி (C)யில் குறிப்பிடப்பட்டுள்ள நாள்படியான பத்தி (D)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகையை வட்டியுடன் அவ்வறிவிப்புக் கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர்கள் அத்தொகையினை செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளின் விதி 8-ன் கீழ் தனக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்தி பத்தி (F)-ல் குறிப்பிட்டுள்ள நாள் படி பத்தி (E)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், பத்தி (E)-ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**-க்கும் பத்தி (D)-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன் சேர்த்து செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.
கடனீட்டுச் சட்டத்தின் பிரிவு 13 (8)-ன் படி மொத்த நிலுவைத் தொகையையும் எல்லாச் செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் விற்பனை அறிவிப்புக்கு முன் செலுத்திக் கடனீட்டுச் சொத்தைக் கடன்தாரர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

வ. எண்.	கடன்தாரர் பெயரும் முகவரியும் மற்றும் கடன் கணக்கு எண்.	கேட்பு அறிவிப்புத் நாள்	நிலுவைத் தொகை ரூ.	அசையா சொத்தின் விவரங்கள்	சுவாதீன தேதி
(a)	(b)	(c)	(d)	(e)	(f)
1.	**கடன் கணக்கு எண்: HE02ONA00000000597 & X0HEONA00003352079 1. ஸ்ரீ சாய் டிவைன் மைனிங் பிரைவேட் லிமிடெட் (விண்ணப்பதாரர்)** மனை எண்.9, முதல் தளம், BF II பேருந்து நிறுத்தம், ராமலிங்கம் தெரு, உள்ளகரம், சென்னை - 600 091. **2. ஏகாம்பரம் வெங்கட்ரமணி சங்கர் (இணை விண்ணப்பதாரர்) 3. குருநாதன் சங்கர் (இணை விண்ணப்பதாரர்). இருவரின் முகவரி :** எண்.27/1, D6, சில்வர் ஸ்பிரிங்ஸ், பெருமாள் நகர், 3வது தெரு, நங்கநல்லூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு-600 061.	14.03.2024	**14.03.2024 அன்று உள்ள படி ரூ. 1,29,89,666.00** மற்றும் அதற்கு உண்டான வட்டி	தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா, கோபரசநல்லூர் கிராமம், ஸ்ரீதேவி நகர் என்ற முகவரியில் சர்வே எண்.13/2, பட்டாவின் படி சர்வே எண்.13/2C2, புதிய பட்டா எண்.1142, பட்டாவின் படி புதிய சர்வே எண்.13/2C2B -ன் படி மனை எண்.2-ல் உள்ள (1.10.2014 தேதியிட்ட அலுவலக கடித எண்.3588/2014/A3, உட்பிரிவு அனுமதி எண். 39614/2014) 1980 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம் (15.10.2014 தேதியிட்ட கடித எண்.3658/2014/A3-ன் படி வரை பட அனுமதி எண்.39627 மற்றும் 15.10.2014 தேதியிட்ட கடித எண்.3659/2014/A3-ன் படி வரை பட அனுமதி எண்.39626) மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: மாலதி அவர்களுக்கு சொந்தமான பங்கு நிலம், தெற்கில்: 24 அடி சாலை, கிழக்கில்: மனை எண்.1 (வகை எண்.1), தெற்கில்: மனை எண்.3, அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 33 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 33 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 60 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 60 அடி. **வகை 1 :** மொத்தமுள்ள 1980 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 252 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் தரை தளத்தில் 606.52 சதுர அடி (பொது பகுதி உட்பட) அல்லது அங்குள்ள படி கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ப்ளாட் எண்.G1. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **வகை 2 :** மொத்தமுள்ள 1980 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 359.1 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் தரை தளத்தில் 814.2 சதுர அடி (பொது பகுதி உட்பட) அல்லது அங்குள்ள படி மற்றும் ஒரு மூடிய கார் நிறுத்தம் உட்பட, கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ப்ளாட் எண்.G2. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **வகை 3 :** மொத்தமுள்ள 1980 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 399.3 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் முதல் தளத்தில் 892.08 சதுர அடி (பொது பகுதி உட்பட) அல்லது அங்குள்ள படி மற்றும் ஒரு மூடிய கார் நிறுத்தம் உட்பட, கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ப்ளாட் எண்.F1. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **வகை 4 :** மொத்தமுள்ள 1980 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 213 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் முதல் தளத்தில் 531 சதுர அடி (பொது பகுதி உட்பட) அல்லது அங்குள்ள படி கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ப்ளாட் எண்.F2. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **வகை 5 :** மொத்தமுள்ள 1980 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 357.3 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் முதல் தளத்தில் 810.66 சதுர அடி (பொது பகுதி உட்பட) அல்லது அங்குள்ள படி மற்றும் ஒரு மூடிய கார் நிறுத்தம் உட்பட, கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ப்ளாட் எண்.F3. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **வகை 6 :** மொத்தமுள்ள 1980 சதுர அடி பரப்பளவு நிலத்தில் 399.3 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் 892.08 சதுர அடி (பொது பகுதி உட்பட) அல்லது அங்குள்ள படி மற்றும் ஒரு மூடிய கார் நிறுத்தம் உட்பட, கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ப்ளாட் எண்.S1. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். இந்த சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.	29.05.2024

தேதி : 31.05.2024
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிட்